2. தகவல் கோரல்

(அ) பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய வகுப்பிலிருக்கக்கூடிய பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கின்ற மக்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டுமென்று நேற்றைய தினம் மத்திய அமைச்சரவையிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது இன்று நாடாளுமன்றத்திலும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. எனவே, அதுகுறித்து அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு சில செய்திகளை நான் சொல்ல விரும்புகிறேன்.*

முன்னேறிய வகுப்பிலே இருக்கக்கூடிய பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கக்கூடியவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க, மத்திய அரசு இன்றைக்கு முழு முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. இது சமூக நீதிக் கொள்கைக்கு முற்றிலும் முரணான வகையில் அமைந்திருக்கிறது. மத்திய அரசினுடைய இந்த முடிவு, நீதிமன்றப் பரிசீலனைக்குமுன் நிச்சயமாக இருக்காது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 15(4), 16(4) ஆகியவற்றில், சமூக நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்று தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று, 12–5–1989 அன்று அப்போதைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், இதே அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அந்த அடிப்படையில், தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்த ஊக்கத்தின் அடிப்படையில், அன்றைக்கு பிரதமராக இருந்த சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்கள், மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை அமல்படுத்தி, மிகப் பெரிய வரலாற்றைப் படைத்தார் என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதையடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றிருந்த அன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், தலைவர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த திரு. அர்ஜுன் சிங் அவர்களின் முயற்சியினால் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாகியும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, Group–A பிரிவில் 17 சதவிகிதமும், Group–B பிரிவில் 14 சதவிகிதமும், Group–C பிரிவில் 11 சதவிகிதமும், Group–D பிரிவில் 10 சதவிகிதமும் மட்டுமே மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கிய பிறகு, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மத்திய அரசுப் பணிகளில் 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட மத்திய அரசின் ஆணையை 9 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட அமர்வு இரத்து செய்திருக்கிறது.

முற்பகல் 11–15

இதிலே இன்னொன்றை குறிப்பாக நாம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழகத்தைச் சார்ந்த மாண்புமிகு நீதியரசர் மறைந்த திரு. ரத்தினவேல் பாண்டியன் அவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு என்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று தெளிவாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறார். உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. B.P. ஜீவன் ரெட்டி அவர்கள், ‘சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியிருக்கக்கூடிய மக்களுக்கும், அந்த மக்களுடைய வாழ்வாதாரத்திற்கும் உதவிட கொண்டு வரப்பட்டதுதான் இட ஒதுக்கீடு. ஆகவே, ஒருவரின் வருமானம் அல்லது சொத்தின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு வழங்குவது அரசியல் சட்டத்திற்கு எதிரானது’ என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். ஆகவே. ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக, அரசியல் சட்டத்திற்கு மாறாக இப்படி ஓர் இட ஒதுக்கீட்டை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே வைத்துக் கொண்டு மத்திய பா.ஜ.க. அரசு, பணியில் சேரும் உரிமை வழங்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின்

2019 ஜனவரி 8] [திரு. மு.க. ஸ்டாலின்]

வாழ்வோடு விபரீத விளையாட்டைத் தொடங்கியிருக்கிறது. அதற்கான முதல் எதிர்ப்புக் குரல் ஆணித்தரமாக ஒலிக்கப்பட வேண்டும். 69 சதவிகித இட ஒதுக்கீட்டை வெற்றிகரமாக அமல்படுத்திய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, கர்ம வீரர் காமராஜர் ஆகியோர் பண்படுத்தித் தந்த வழியிலே சமூக நீதியின் நாற்றங்காலாகத் தொடர்ந்து இருந்து வரக்கூடிய இந்தச் சட்டமன்றத்தில் சமூக நீதியினுடைய கட்டமைப்பை அசைத்துப் பார்க்க எண்ணிக் கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதே அவையிலே நான் பேசுகிறபோது ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினையைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இன்று வந்திருக்கக்கூடிய செய்தி, ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என்று உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் செய்தி வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி வந்திருந்தால் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.*

(அ) பொருளாதாரத்தில் பின்தங்கிய முன்னேறிய வகுப்பினருக்கு பத்து சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியவர்களுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு கேபினட்டில்*